<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**(Chapter XXII Code of Criminal Procedure)**</u>

<u>கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.1 |
| பெயர் | ரசீத்தா | ஜாதி | |
| கணவர் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 24th day of September 2024.

**(1** வது அக்ரம் ஜிந்தா, **4** வது எதிரி அனு என்கிற அன்சாத், **5** ஆம் எதிரி ஜாபர் அலி என்கிற ஜாபர், **6** ஆம் எதிரி அப்துல் முனாப் என்கிற முனப் எதிரிகள் ஆஜர், **2** வதுஎதிரி சதாம் உசேன் என்கிற சதாம், **3** ஆம் எதிரி சம்சுதீன் என்கிற சம்சு என்கிற கூளை சம்சு எதிரிகள் ஆஜரில்லை. **BNSS 355** ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் **10** வது வகுப்பு வரை படித்துள்ளேன். கடந்த **2017** ஆம் வருடம் **62/2** பிலால் எஸ்டேட், தெற்கு உக்கடம், **1** வது வீதி, கோவையில் குடியிருந்தேன். தற்பொழுது நான் செல்வபுரத்தில் உள்ள எனது தாயார் வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனக்கும் எனது கணவர் பரூக்கிற்கும் **2005** ல் திருமணம் நடந்தது. எனக்கு முகமது அப்ரிக் என்ற மகனும், அனபா என்ற மகளும் உள்ளனர். எனது கணவர் பழைய இரும்பு வியாபாரம் செய்து வந்தார். எனது கணவர் வியாபாரத்திற்காக டி.என். **38-**ஏ.டிவி**5479** என்ற எக்ஸ்சல் வண்டியை பயன்படுத்தி வந்தார். நாங்கள் உக்கடத்தில் குடியிருந்த வீடு எனது மாமியார் நபீசா அவர்களுக்கு சொந்தமானதாகும். அந்த வீடு இரண்டு தளங்கள்

கொண்டது. கீழ்தளத்தில் நான், எனது கணவர் மற்றும் எனது மாமியார் குடியிருந்தோம். மேல் தளத்தில் எனது நாத்தனார் பாத்திமாவின் குடும்பம் குடியிருந்து வந்தது. பாத்திமாவின் கணவர் பெயர் பசீல் ரகுமான். எனது கணவர் ஜாபர் என்பவருடன் இரும்பு வியாபாரம் செய்து வந்தார். எனது கணவர் குளத்தூர் மணியின் திராவிட விடுதலை கழகத்தில் இருந்து கொண்டு கடவுள் இல்லை என்ற கொள்கையை வைத்திருந்தார். அந்த கொள்கையில் அவர் மிகவும் தீவிரமாக இருந்தார். எனது கணவர் பொதுவாக கடவுளுக்கு எதிராகவும், முகமது நபி அவர்களுக்கு எதிராகவும் விமர்சனம் செய்வார். வேலை நேரம் முடிந்தவுடன் எனது கணவர் **face book** மற்றும் **whatsapp** போன்ற **social media** வில் ஏக்டிவாக இருந்தார். எனது கணவர் தொழுகைக்கும் போகமாட்டார். மதரீதியான சடங்கு சம்பிரதாயங்களுக்கும் செல்லமாட்டார். வாட்ஸ்ஆப்பில் அல்லாஹி முர்தத் என்ற குரூப்பில் இணைந்திருந்தார். அல்லாஹி முர்தத் என்பது முஸ்லீம்களில் இருந்த வெளியேறியவர்கள் என்ற அர்த்தமாகும். **2016** ல் செப்டம்பர் மாதம் இந்து முன்னனி அமைப்பைச் சேர்ந்த சசிகுமார் என்பவர் கொலை செய்யப்பட்டார். அதனால் கோவை கரும்புக்கடை அருகில் டோல்கேட்டை உடைத்த வழக்கில் சம்மந்தப்பட்டார் என்று கூறி எனது கணவரை கைது செய்தனர். முதலில் குனியமுத்தூர் காவல் நிலையத்தினர் அவரை கைது செய்தனர். பின்னர் குண்டர் சட்டத்தில் சேலம் சிறையில் அவரை அடைத்தார்கள். அதனால் நான் குளத்தூர் மணி அவர்களிடம் தெரிவித்தேன். அவர் சென்னையில் அது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்து அவரை வெளியில் கொண்டு வர முயற்சி செய்தார்கள். எனது கணவர் சிறையில் இருக்கும் பொழுது அவரது நண்பர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். ஜாபரும், சதாம்உசேனும் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அப்போது நானும், எனது

மாமியாரும் வீட்டில் இருந்தோம். அப்பொழுது ஜாபர் எனது மாமியாரிடம் பரூக் அல்லாவிற்கு எதிராக பேசுவதால் நீங்களே அவரை கொன்று விட்டால் அவர் நேராக சொர்கத்திற்கு சென்று விடுவார். இல்லையென்றால் நாங்கள் அதை செய்ய நேரிடும் என்று கூறினார். அப்பொழுது சதாமும் உடன் இருந்தார். தற்பொழுது நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் **5** வது எதிரியான ஜாபரை சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். **2** வது எதிரி சதாம் உசேன் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை என்பதையும் சாட்சி கூறுகிறார். எனது மகள் பிறந்த நாள் அன்று **07-12-2016** அன்று எனது கணவர் சிறையிலிருந்து வீட்டிற்கு வந்தார். அவருடன் திராவிட கட்சியினரும் எங்கள் வீட்டிற்கு வந்து கேக் வைத்து எனது மகளின் பிறந்தநாளை கொண்டாடினோம். அப்பொழுது எனது கணவர் ஏற்கனவே கடவுள் இல்லை, கடவுள் இல்லவேயில்லை என்று பேப்பரில் எழுதி அதை எனது மகளை பிடிக்க வைத்து எடுத்த போட்டோவை அவரது பேஸ்புக்கில் பதிவிட்டார். அதைப் பார்த்து அவருக்கு நிறைய மிரட்டல்கள் வந்தன. எனது கணவரின் நண்பர்களும் அவரை திட்ட ஆரம்பித்தார்கள். நானும், எனது கணவரைப்பார்த்து ஏற்கனவே ஜாபரும், சதாமும் வந்து மிரட்டிவிட்டுச் சென்ற விஷயத்தை எனது கணவரிடம் கூறி, கவனமாக இருக்கும்படி கூறினேன். நான் நண்பர்கள் என்று குறிப்பிடுவது எனது கணவரோடு பேஸ்புக்கில் உடன் இருந்தவர்கள் ஆவார்கள். எனது கணவருடன் வியாபாரம் செய்து வந்த ஜாபர் இறை நம்பிக்கை உள்ளவர். ஆனால் எனது கணவர் கடவுள் மறுப்பு கொள்கையில் இருந்ததால் இருவரும் கூட்டு வியாபாரத்திலிருந்து பிரிந்து விட்டார்கள். சாட்சி இன்று ஆஜரில் இருக்கும் **6** வது எதிரி அப்துல் முனாபை அடையாளம் காட்டி அப்துல் முனாப் ஆரம்பத்தில் இறை நம்பிக்கையோடு இருந்து பின்னர் எனது கணவர் ஜெயிலிலிருந்து வந்த பின்னர் இறை மறுப்பு

கொள்கையில் ஈடுபடபோவதாக எனது கணவரிடம் கூறியதாக எனது கணவர் என்னிடம் கூறினார். ஆனால் நான் முனாப் இறை நம்பிக்கை அதிகம் உள்ளவர், அதனால் அவர் பேச்சை நம்ப வேண்டாம் என்று எனது கணவரை எச்சரித்தேன். சுமார் ஒரு மாதத்திற்கு பின்னர் எனது கணவருக்கு செல்போனில் ஒரு அழைப்பு வந்ததது. அதிலிருந்து அவர் டென்சனாக காணப்பட்டார். நான் என்னவென்று விசாரித்த பொழுது உன் வேலையைப் பார் என்று என்னை கூறினார். கடந்த **16-03-2017** ஆம் தேதி இரவு சுமார் **10.45** மணியிலிருந்து **11** மணி அளவில் வேலை முடித்து எனது கணவர் வீட்டிற்கு வந்தார். அப்பொழுது எனது மாமனார் எனது கணவரை போனில் அழைத்தார். எனது மாமனார் பெயர் அமீத் ஆகும். எனது மாமனாரிடம் எனது கணவர் சுமார் **10** நிமிடம் போனில் பேசி விட்டு போனை சார்ஜில் போட்டு விட்டு ஹாலில் சென்று அமர்ந்து விட்டார். சுமார் **5** நிமிடத்தில் மீண்டும் கால் வரவே போனை என்னை எடுத்து வருமாறு எனது கணவர் கூறினார். டிஸ்பிலேயில் பெயர் வரவில்லை. நெம்பர் மட்டும்தான் வந்தது. அப்பொழுது போனில் எனது கணவர் போனில் பேசியவரிடம் முனிசிபாலிட்டி அருகில் இருக்கிறாயா நானும் வருகிறேன் என்று கூறினார். அப்பொழுது இரவு **11** மணிக்கு மேல் ஆகி விட்டதால் அவரை நாங்கள் வேண்டாம் என்று தடுத்தோம். அதற்கு எனது கணவர் முனாப்தான் தன்னை அழைப்பதாகவும், வண்டியில் பெட்ரோல் தீர்ந்து விட்டதால் தான் பெட்ரோல் வாங்கிக் கொடுத்து விட்டு வந்து விடுவதாக கூறியதை தொடர்ந்து முனாப் அவர் நண்பர்தானே என்று நாங்களும், எனது கணவரை போக அனுமதித்தோம். எனது கணவர் செல்லும் பொழுது லுங்கியுடன்தான் சென்றார். நான் மேலே குறிப்பிட்ட அவரது இரு சக்கர வாகனத்தில்தான் அப்பொழுது சென்றார். எனது கணவர் வைத்திருந்த செல்போன் நெம்பர் **9442709128** ஆகும். அன்றைய

தினம் இரவு **12** மணிக்கு மேல் எனது நாத்தனாருக்கு அவரது கணவர் பசூல் ரகுமான் போன் செய்து எனது கணவர் வீட்டில் இருக்கிறாரா என்று கேட்டார். எனது கணவர் வீட்டிற்கு வந்ததைப் பார்த்த எனது நாத்தனார் அவர் வெளியே சென்றதை கவனிக்காமல் அவர் வீட்டில் இருப்பதாகக் கூறினார். பின்னர் மீண்டும் நாத்தனாரின் கணவர் மாமியார் எண்ணிற்கு போன் செய்து எனது கணவரை பற்றி விசாரித்தார். அதற்கு எனது மாமியார் பாரூக் இப்போதுதான் வெளியே சென்றான் என்று கூறினார். அப்பொழுது எனது நாத்தனாரின் கணவர்ள எனது மாமியாரிடம் ஆட்டிடைமனை வாசலில் எனது கணவரின் கழுத்து அறுத்து போட்டு விட்டதாக கூறினார். அழுது கொண்டே எனது மாமியார் அந்த தகவலை என்னிடம் கூறினார்கள். அதிர்ச்சி அடைந்த நான் அழுது கொண்டிருந்தேன். நானும், எனது மாமியாரும் சம்பவ இடத்திற்கு செல்லலாம் என்று இருந்தபோது எனது நாத்தனாரின் கணவர் நீங்கள் தனியாக வரவேண்டாம். நான் வந்து அழைத்து வருகிறேன் என்று கூறினார். பின்னர் நாத்தனாரின் கணவர் எங்கள் இருவரையும் சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு எனது கணவர் கழுத்து அறுக்கப்பட்டு பல இடங்களில் காயங்களுடன் கிடந்தார். அவரது அருகில் அவரது செல்போனும், சற்று தொலைவில் அவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனமும் கிடந்தது. அதனால் அது சம்மந்தமாக புகார் கொடுக்க அபுதாஹீர் என்ற எங்கள் உறவினருடன் பி.**1** காவல் நிலையத்திற்குச் சென்றோம். நான் பதட்டமாக இருந்ததால் நான் கூற புகாரை அபுதாஹீர் எழுதினார். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் புகார்தான் பி.**1** காவல் நிலையத்தில் நான் கொடுத்ததாகவும். அது அ.த.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரில் எனது கையொப்பம் காணப்படுகிறது. (புகார் ஒரு தாளில் இரண்டு பக்கங்கள் கொண்டதாக உள்ளது.)

புகாரைக் கொடுத்துவிட்டு மீண்டும் சம்பவ இடத்திற்கே வந்தோம். சம்பவ இடத்தில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள். விசாரித்து எனது வாக்குமூலத்தை பதிவு செய்து கொண்டார்கள். மறுநாள் அன்சாத் என்பவர் எனது கணவர் கொலை வழக்கு சம்மந்தமாக சரண் அடைந்ததாக நான் தெரிந்து கொண்டேன். மறுநாள் சம்சுதீன், சதாம் இருவரும் சரண் அடைந்ததாக கேள்விப்பட்டேன். அதன் பின்னர் ஜாபர், முனாப், அக்ரம்ஜிந்தா ஆகியோர்களை போலீசார் கைது செய்ததாக கேள்விப்பட்டேன். மேலே குறிப்பிட்ட நபர்கள் எனது கணவரிடம் நண்பர்களாக பழகி விட்டு அவர்கள்தான் அவரை கொலை செய்தார்கள் என்று பின்னர் நான் தெரிந்து கொண்டேன். ஜாபரும், சதாமும் ஏற்கனவே சொன்னது போன்று எனது கணவரை கொலை செய்து விட்டார்கள். **Face book, whatsapp** ஊடக செய்திகள் காரணமாகத்தான் எனது கணவர் கொலை செய்யப்பட்டார். மதவெறி மற்றும் பயங்கரவாதம்தான் எனது கணவரின் கொலைக்கு காரணமாகும். எனது கணவருக்கு மனிதம்,மனிதம்,மனிதம் மற்றும் பரூக் டி.வி.கே., பரூக், பருக் டி.வி.கே., மற்றும் பாரூக், பாரூக் ஆகிய பெயர்களில் சோசியல் மீடியாவில் கணக்கு இருந்தது. இது சம்மந்தமாக சி.பி.சி.ஐ.டி போலீசார் என்னை மீண்டும் விசாரித்தார்கள். அதற்கு பின்பும் சி.பி.சி.ஐ.டி போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படங்களை (இரண்டு) வைத்து சி.பி.சி.ஐ.டி போலீசார் என்னை விசாரித்தார்கள். அந்த புகைப்படங்கள் எதிரிகளின் தரப்பில் ஆட்சேபணையுடன் அ.த.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கையில் கீழே காணப்படுவது எனது கையொப்பம்தான். எனது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.**3** ஆக குறியிடப்படுகிறது. எனது கணவரின்

கொலைக்கு நியாயம் வேண்டும். சாட்சி ஆஜரில் இருக்கும் அக்ரம் ஜிந்தா, அன்சார், ஜாபர் அலி, அப்துல் முனாப் ஆகியோர்களை சரியாக அடையாளம் காட்டினார். இன்று நீதிமன்றத்திற்கு ஆஜராகாத சதாம் உசேன் மற்றும் சம்சுதீனைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். எனது கணவரின் இருசக்கர வாகனத்தையும் என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படங்களில் காணப்படுவது எனது கணவர் பயன்படுத்திய இருசக்கர வாகனம்தான். புகைப்படத்தில் எனது கணவரின் உடலும் காணப்படுகிறது. எனது கணவர் அப்பொழுது லுங்கி அணிந்துள்ளார். புகைப்படங்கள் அ.த.சா.ஆ.4 வரிசைகளாக (9 எண்ணிக்கை) குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்திற்கு கீழே நிறுத்தப்பட்டிருக்கும் இருசக்கர வாகனத்தை சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். அதனால் இரு சக்கர வாகனம் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும்லுங்கி மற்றும் சட்டை இரண்டும்தான் சம்பவத்தன்று எனது கணவர் போட்டிருந்ததாகும். லுங்கி சா.பொ.2 ஆகவும், சட்டை சா.பொ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>1,3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கும் எனது கணவருக்கும் 2005 ல் திருமணம் நடந்தது. எனது திருமணத்தின்பொழுது எனது கணவர் முழுமையாக இஸ்லாத்தை தழுவியிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது கட்டாயத்தினால் திருமணத்தன்று தொழுகையில் ஈடுபட்டார். எங்களது திருமணம் இஸ்லாமியர் முறைப்படிதான் நடந்தது என்றால், சரிதான். எனது கணவர் பரூக் கரும்புகடை ஜமாத்தை சேர்ந்தவர். நான் செல்வபுரம் ஜமாத்தை சேர்ந்தவர். முஸ்லீம்

வழக்கப்படி முஸ்லீமை முழுமையாக ஏற்றுக் கொண்டால் மட்டுமே இறந்த பின்பு கபஸ்தானில் அடக்கம் செய்வார்கள் என்றால் சரியல்ல. முஸ்லீமாக இருந்தாலே அடக்கம் செய்வார்கள். எனது நாத்தனாரின் கணவர் எனது திருமணத்திற்கு முன்பாக எங்கு வசித்து வந்தார் என்று எனக்குத் தெரியாது. அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று எனக்குத் தெரியாது. எனது மாமனார் பெயர் ஹமீது. அவர் வேலை நிமித்தமாக சென்னையில் உள்ளார். எனது கணவர் இறந்த சமயத்திலும் அவர் சென்னையில்தான் இருந்தார். எனது கணவர் இறந்து கிடந்த இடம் எங்களது வீட்டிலிருந்து எந்த திசையில், எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று சொன்னால் திசை தெரியாது, ஆனால் சுமார் **1/2** கி.மீ தொலைவில் இருந்தது. எனது நாத்தனாரின் கணவர் எங்கள் வீட்டிற்கு வந்து என்னையும், எனது மாமியாரையும் சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்றார். சம்பவ இடத்திற்கு எதிரே கட்டிடங்கள் இடிக்கப்பட்டு ஒரு காலியிடம் இருந்தது என்றால் சரிதான். சுமார் **12** மணி அளவில் சம்பவ இடத்திற்குச் சென்றோம். எவ்வளவு நேரம் அங்கு இருந்தோம் என்று தற்பொழுது நினைவில்லை. நான் கூற அபுதாஹீர் எழுதிய புகாரில் முனாப் அழைத்து எனது கணவர் சம்பவ இடத்திற்கு சென்றதாக நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். காரணம் நான் பதட்டமாக இருந்ததால் அந்த விவரத்தை புகாரில் கூறவில்லை. உக்கடம் பேரூந்து நிலையம் மற்றும் காவல் நிலையத்திற்கு எதிரே சுமார் **5000** குடும்பங்கள் குடியிருந்து வந்த முனிசிபாலிட்டி காலனி இருந்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால், எனக்குத் தெரியாது. முனிசிபாலிட்டி என்பதே அந்த காலனியை குறிக்கும் வார்த்தை என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. அவர் இறந்து கிடந்த இடத்தைத்தான் முனிசிபாலிட்டி என்று எனது கணவர் கூற நானும் அவ்வாறுதான் நினைத்திருந்தேன். எனது கணவர் இறந்த சமயத்தில் எனக்கும் தனிப்பட்ட

முறையில் ஹாண்டிராய்டு போன் இருந்தது என்று சொன்னால் சரிதான். அல்லாஹி முர்தத் என்ற வாட்ஸ்ஆப்பில் நான் இல்லை. எனது குடும்பத்தைச் சேர்ந்த யாரும் அந்த குரூப்பில் இல்லை. எனது கணவர் குண்டாஸில் கைது செய்யப்பட்ட ஆவணங்கள் பற்றிய விவரம் எனக்குத் தெரியாது. அந்த ஆவணங்களைப் பார்த்தால் எனது கணவர் எந்த, எந்த குற்ற வழக்குகளில் தொடர்பில் இருந்தார் என்ற விவரம் தெரிய வரும் என்று சொன்னால், சரிதான். எனது கணவர் கொலை சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தபோது குண்டாஸ் ஆவணங்களைப் பற்றி என்னிடம் கேட்டார்களா என்று எனக்கு நினைவில்லை. சி.பி.சி.ஐ.டி போலீசார் என்னை இருமுறை விசாரிக்கும்பொழுதும் குண்டாஸ் ஆவணங்களைப் பற்றி கேட்டார்கள். ஆட்டிடைமனை வாசல் புல்லுக்காடு எந்த திசையில் உள்ளது என்றால் எனக்கு திசைப் பற்றித் தெரியாது. எனக்கு திருமணம் ஆனதிலிருந்தே அந்த ரோட்டில்தான் சென்று வருவேன். சம்பவம் நடந்த இடத்தில் எங்களது குடும்ப உறுப்பினர்களைத் தவிர வேறு யாரேனும் இருந்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. சி.பி.சி.ஐ.டி போலீசார் விசாரித்ததற்கும், பஜார் காவல் நிலைய போலீசார் விசாரித்ததற்கும் சுமார் ஒருமாத கால இடைவெளி இருக்கும். பஜார் போலீசார் என்னை விசாரிக்கும்பொழுது ஜாபர் மற்றும் சதாம் இருவரும் எங்கள் வீட்டில் வந்து மிரட்டியதை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். காரணம் பதட்டத்தில் நான் அதை குறிப்பிடவில்லை. புகாரில் நான் பதட்டமாக இருந்ததால் அபுதாஹிர் எழுதியதாக நான் புகாரில் குறிப்பிடவில்லை என்று சொன்னால், சரிதான். எனது கணவரும், ஜாபரும் மதம் சம்மந்தமாக பிரிந்திருந்தார்கள் என்று புகாரில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சா.பொ.1 எனது கணவர் பெயரில் இல்லை என்று சொன்னால் சரிதான். பழைய

வாகனத்தை எனது கணவர் செக்கண்ட்ஹேண்டில் வாங்கினார். ஆனால் இந்த விவரத்தை போலீசார் என்னை மூன்று முறை விசாரித்தபோதும் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். எனதுகணவர் போட்டிருந்த உடைகளின் (சா.பொ.**2** மற்றும் **3**) விவரங்களை பஜார் போலீசார் விசாரித்தபோது நான் கூறவில்லை என்று சொன்னால், சரிதான். சம்பவத்தன்று இரவு **11** மணிக்கு எனது கணவர் வீட்டிற்கு வந்த விவரம் எனது நாத்தனாருக்குத் தெரியும். எனது நாத்தனார் எனது கணவர் வீட்டில் இருப்பதாக அவரது கணவரிடம் கூறினார் என்றால், சரிதான். எனது கணவரும், ஜாபரும் கூட்டாக தொழில் செய்தார்கள் என்று காட்டுவதற்கு ஆதாரமான ஆவணங்களை போலீசார் விசாரணையில் கேட்டார்களா என்றால், கேட்கவில்லை. எனது கணவரும், ஜாபரும் கூட்டாக தொழில் செய்தார்கள் என்று காட்டுவதற்கு தற்போது என்னிடம் எந்த ஆவணமும் இல்லை. முதலாம் எதிரி அக்ரம்ஜிந்தா எனது வீட்டிற்கு வந்ததில்லை. **6** ஆம் எதிரி முனாப் எனது மகனின் முதல் பிறந்த நாளுக்கு மட்டும் எனது வீட்டிற்கு வந்தார். அதற்கு பின்பு நான் அவரை பார்க்கவில்லை. **3** ஆம் எதிரி சம்சுதீன் எனது வீட்டிற்கு எந்த விஷேசத்திற்கும் வந்ததில்லை. **30-06-2017** ஆம் தேதி போலீசார் என்னை விசாரித்தபோது அ.த.சா.ஆ.**2** ஐ காண்பித்து விசாரித்தார்கள். ஆனால் அ.த.சா.ஆ.**2** ஐப் பற்றி பஜார் போலீசார் விசாரித்தபோது நான் கூறவில்லை என்றால், சரிதான். சம்பவ இடத்தில் எனது கணவரை நான் முதன் முதலாகப் பார்த்தபொழுது போலீசார் புகைப்படக்காரரோடு இருந்தார்களா என்று எனக்கு நினைவில்லை. பின்னர் காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு நாங்கள் திரும்பி வந்தபோது போலீசாரும் உடன் வந்தார்கள். அப்போதாவது போலீசாருடன் புகைப்படக்காரர்கள் வந்தார்களா என்றால் நினைவில்லை. எவ்வளவு நேரம்

சம்பவ இடத்தில் இருந்தேன் என்றும் நினைவில்லை. அ.த.சா.ஆ.**4** புகைப்படங்கள் எப்பொழுது, யாரால் எடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. எனது கணவர் இறப்பிற்கு மதவிரோதம் காரணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரிகளுக்கும், எனது கணவரின் இறப்பிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் நான் கொடுத்த புகாரில் மதம் சம்மந்தப்பட்ட பிரச்சனையை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் குறியீடு செய்த ஆவணங்கள் மற்றும் வழக்குச் சொத்துக்கள் வழக்கிற்காக போலீசாரால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் அ.த.சா.ஆ.**1** புகார் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால், சரியல்ல. அ.த.சா.ஆ.**1** புகார் வழக்கிற்காக சம்பவம் நடந்த மறுநாள் **17-04-2017** ல் போலீசாரால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. **16-04-2017** அன்று **6** வது எதிரி முனாப் எனது கணவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டார் என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தில் சரண்டர் ஆனதோ அல்லது போலீசாரால் கைது செய்யப்பட்ட விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்று சொன்னால் சரிதான். என் தம்பி சொல்லி எனக்குத் தெரியும். எனது தம்பி கூறி தெரிந்து கொண்டதாக நான் தற்போதுதான் முதன் முறையாக கூறுகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. எனது முதல் சாட்சியத்தில் நான் குறிப்பிட்ட சாட்சியங்கள் அனைத்தும் சி.பி.சி.ஐ.டி போலீசார் சொல்லிக் கொடுத்து நான் சொல்லியது என்று சொன்னால் சரியல்ல.

<u>**2** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது கணவர் திராவிட விடுதலை கட்சியில் சுமார் **10** வருடங்கள் இருந்தார். திராவிடர் விடுதலை கட்சியில் பொறுப்பிலும், உறுப்பினராகவும் இருந்தார். குளத்தூர் மணி எனது கணவர் இறப்பதற்கு முன்பு இரண்டு முறை வீட்டிற்கு வந்துள்ளார். திராவிட விடுதலை கழகம் இறைமறுப்பு கழகம் என்று சொன்னால் சரிதான். இந்து முன்னனி கட்சி என்பது இறை நம்பிக்கை அதிகம் உள்ள கட்சி என்று சொன்னால் சரிதான். நான், எனது மாமியார், மாமனார், எனது நாத்தனார், அவரது கணவர் ஆகியோர்கள் இறை நம்பிக்கை உள்ளவர்கள் என்று சொன்னால் சரிதான். எனது கணவருக்கு லேப்டாப், கம்ப்யூட்டர், ஐபேட் போன்ற பொருட்கள் இருந்ததில்லை. நான் புகார் கொடுக்கும்பொழுது ஜாபர் அலி எனது மாமியாரிடம் எனது கணவரைப் பற்றி அவர் அல்லாவிற்கு எதிராக பேசுவதால் அவனை நீங்களே கொன்று விடுங்கள் இல்லையென்றால் நாங்கள் கொலை செய்ய நேரிடும் என்று கூறிய விவரம் எனக்கு ஞாபகம் இருந்தது. எனக்கு தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப் படிக்கத் தெரியும். ஆங்கிலம் பெரிதாக தெரியாது. அ.த.சா.ஆ.**1** ல் ஆங்கிலத்தில்தான் கையெழுத்து செய்துள்ளேன். புகார் கொடுக்க உதவிய அபுதாஹிர் எனது மாமியாரின் உறவினர் ஆவார். புகாரானது காவல் நிலையத்தில் வைத்து நான் கூற அபுதாஹிர் எழுதியது என்று சொன்னால் சரிதான். புகாரை அபுதாஹிர் என்னிடம் படித்துக் காட்டி பின்னர் நான் கையொப்பம் செய்தேன். புகாரைக் கொடுக்கும்போது யார் மீதாவது எனக்கு சந்தேகம் இருக்கிறதா என்று போலீசார் என்னை கேட்கவில்லை, நானும் கூறவில்லை. குண்டாஸ் ஆவணங்களில் இந்துக்கள் மத நம்பிக்கை சம்மந்தப்பட்ட ஆவணங்களும் இருந்தனவா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது. சதாமும், ஜாபரும் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள் என்று நான் கூறுவது

முற்றிலும் தவறு என்று சொன்னால் சரியல்ல. **16-04-2017** அன்று என்னிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தில் எந்த தேதியில், எப்பொழுது, எத்தனைமணிக்கு சதாமும், ஜாபரும் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள் என்ற விவரத்தை நான் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் குடியிருக்கும் கரும்புகடை பகுதி மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள பகுதி என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் குடியிருப்பவர்கள் பெரும்பாலும் எங்கள் மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் எதிரிகளுக்கும், எனது கணவரின் கொலைக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் மத வெறியினால் கொலை செய்யப்பட்டார் என்பதும் தவறு என்று சொன்னால் சரியல்ல.

<u>**5** எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அல்லாஹி முர்தத் என்பது மதம் சம்மந்தப்பட்டது அல்ல என்று சொன்னால், மதத்திலிருந்து வெளியேறியவர்களைப் பற்றிய வார்த்தையாகும். இஸ்லாத்தில் ஹனபி சுன்னத் என்ற இரு பிரிவுகளைத் தவிர அல்லாஹி முர்தத் என்ற பிரிவு கிடையாது என்று சொன்னால் மதத்திலிருந்து வெளியேறுபவர்களைப் பற்றி அவ்வாறுதான் குறிப்பிட்டுள்ளார்கள். நான் இறை மறுப்பு கொள்கை உடையவர் அல்ல. திருமணத்தின்பொழுது பள்ளிவாசலில் சிறப்பு தொழுகை செய்து திருமணம் செய்து வைப்பார்கள் என்று சொன்னால் சரிதான். போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் குறிப்பாக எந்த தேதியில், எந்த மாதத்தில், எப்பொழுது சதாமும், ஜாபர் அலியும் என் வீட்டிற்கு வந்தார்கள் என்று நான் குறிப்பிட்டுக் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். திராவிட விடுதலை சட்சியினர் எங்கள் வீட்டு விசேசங்களுக்கு வருவார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் மகளின் பிறந்த நாள் அன்று மட்டும் ஒருமுறை

வந்தார்கள். எனது மகளின் பிறந்தநாளுக்கு ஜாபரும், சதாமும் வரவில்லை. காரணம் நாங்கள் என் மகளின் பிறந்த நாளை விழாவாக கொண்டாடவில்லை. எனது கணவர் ஜெயிலிலிருந்து வெளியில் வந்ததற்கு கழக தொண்டர்கள் காரணம் என்பதால் பிறந்த நாள் அன்று எனது கணவரை அவர்கள் அழைத்து வந்த காரணத்தினால் அவர்களை வைத்து கேக் வெட்டினோமே தவிர விழாவாக ஏற்பாடு செய்யவில்லை. ஜாபரும், சதாமும் மிரட்டிய விவரத்தையும், எனது கணவர் சிறையிலிருந்து வந்த பிறகு வந்த மிரட்டல்கள் பற்றியும் அருகில் உள்ள காவல் நிலையத்திலோ அல்லது உறவினர்களிடமோ நான் கூறவில்லை என்றால் சரிதான். நான் எனது கணவர் தொழில் செய்யும் கடைக்கு சாப்பாடு கொண்டு செல்வேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையின்பொழுது நான் கூறவில்லை. தி.க. வெளியிடும் நாளிதழ் மட்டும் எங்கள் வீட்டிற்கு வரும், மற்ற நாளிதல்களை நாங்கள் வாங்குவதில்லை. எதிரிகள் சரண்டர் மற்றும் கைது ஆன விவரங்களை போலீசார் சொல்லிக் கொடுத்து நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தபோது எனது கணவர் அணிந்திருந்த உடைகளின் நிறம் மற்றும் டிசைன்கள் பற்றி நான் கூறவில்லை என்றால் சரிதான். இறை நம்பிக்கை இல்லாமல் இருந்த எனது கணவரை அவரது தாய், தந்தையர் கண்டிக்கவில்லை என்று சொன்னால், எனது கணவர் யார் சொன்னாலும் கேட்கமாட்டார். ஜாபர் எனது கணவரின் கொலையில் சம்மந்தப்பட்டுள்ளார் என்று போலீசார் சொல்லிக் கொடுத்து நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. **07-12-2016** அன்று வீட்டிற்கு வந்த என் கணவரிடம் சதாமும், ஜாபரும் மிரட்டினார்கள் என்று நான் எனது கணவரிடம் கூறிய விவரத்தை போலீசார் என்னை விசாரித்தபோது நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். ஜாபரை நான் பார்த்ததில்லை என்று

சொன்னால் சரியல்ல. எனது மகனின் முதல் பிறந்த நாள் அன்று ஜாபரும், முனாப் இருவரும் வந்துள்ளார்கள். நான் ஜாபரை அவர் தொழில் செய்யும் கடையில் வைத்தும் பார்த்துள்ளேன். எனது மகனின் பிறந்த நாளுக்கு ஜாபர் வந்த விவரத்தையும், அவர் புகைப்படம் எடுத்துக் கொண்ட விவரத்தையும் நான் போலீசார் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். சா.பொ.1 வாகனம் எனது கணவர் செக்கண்ட்ஹெண்டில் வாங்கியதாகும். ஆனால் அந்த வாகனம் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. எனது கணவரின் கொலைக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், போலீசார் சொல்லிக் கொடுத்து நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/ரசீத்தா,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.2 |
| பெயர் | | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 24th day of September 2024.

முதல் விசாரணை

1

(இந்நிலையில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை விசாரணை

1

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எ

மறு விசாரணை இல்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.3 |
| பெயர் | | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 24th day of September 2024.

முதல் விசாரணை

1

(இந்நிலையில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை விசாரணை

1

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எ

மறு விசாரணை இல்லை

# **DEPOSITION OF WITNESS**

## **(Chapter XXII Code of Criminal Procedure)**

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.4 |
| பெயர் | | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 24th day of September 2024.

முதல் விசாரணை

1

(இந்நிலையில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை விசாரணை

1

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எ

மறு விசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.5 |
| பெயர் | | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 24th day of September 2024.

முதல் விசாரணை

1

(இந்நிலையில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை விசாரணை

1

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எ

மறு விசாரணை இல்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.6 |
| பெயர் | | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 24th day of September 2024.

முதல் விசாரணை

1

(இந்நிலையில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை விசாரணை

1

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எ

மறு விசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.7 |
| பெயர் | | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 24th day of September 2024.

முதல் விசாரணை

1

(இந்நிலையில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை விசாரணை

1

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எ

மறு விசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.8 |
| பெயர் | | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 24th day of September 2024.

முதல் விசாரணை

1

(இந்நிலையில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை விசாரணை

1

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எ

மறு விசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.9 |
| பெயர் | | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 24th day of September 2024.

முதல் விசாரணை

1

(இந்நிலையில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை விசாரணை

1

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எ

மறு விசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.10 |
| பெயர் | | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 24th day of September 2024.

முதல் விசாரணை

1

(இந்நிலையில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை விசாரணை

1

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எ

மறு விசாரணை இல்லை